செய்தி வெளியீட்டு எண். 187 நாள்: 26.2.2011

## 24 ஆயிரத்து 230 கோடி ரூபாய் முதலீட்டுடன் சுமார் 16 ஆயிரம் பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய 10 தொழில் திட்டங்களுக்கு தமிழக அரசின் தொகுப்பு சலுகைகள் மற்றும் ஆதரவு கடிதங்களை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இன்று (26.2.2011) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 4 ஆயிரத்து 320 கோடி முதலீட்டில் திரவ நிலை இயற்கை எரிவாயு சேமிப்பு முனையம் அமைக்கின்ற இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சி திட்டம்– ரூபாய் ஆயிரத்து 800 கோடி முதலீட்டில் மோட்டார் வாகன மற்றும் சோதனை வசதிகள் கொண்ட மகிந்திரா அண்ட் மகேந்திரா நிறுவனத்தின் திட்டம் – ரூபாய் 2 ஆயிரத்து 262 கோடி முதலீட்டில் கலப்பு உருக்கு, ஃபவுண்டரி மற்றும் ஃபோர்ஜிங் ஆலைகளை அமைக்கின்ற சுந்தரரேஸ்வரர் அலாய் மற்றும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் நிறுவனத்தின் திட்டம் – ரூபாய் 2 ஆயிரத்து 100 கோடி முதலீட்டில் டயர் தொழிற்சாலை அமைக்கின்ற அப்பலோ நிறுவனத்தின் திட்டம் – ரூபாய் ஆயிரத்து 143 கோடி முதலீட்டில் மெட்ராஸ் சிமெண்ட் நிறுவனத்தின் சிமெண்ட் ஆலை விரிவாக்கத் திட்டம் – ரூபாய் 700 கோடி முதலீட்டில் ஸ்டீல் கம்பிகளை தயாரிக்கக்கூடிய பெக்கார்ட் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் திட்டம் – ரூபாய் 350 கோடி முதலீட்டில் சாம்சங் இந்தியா நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் – ரூபாய் 328 கோடி முதலீட்டில் கே.பி.ஆர். மில் நிறுவனத்தின் ஸ்பின்னிங் மில் விரிவாக்கத் திட்டம் – ரூபாய் 250 கோடி முதலீட்டில் காலணிப் பொருட்களை தயாரிக்கும் செய்யாறு சிறப்பு பொருளாதார மண்டல நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டம் – மேலும் ரூபாய் 10 ஆயிரத்து 980 கோடி முதலீட்டில் சினர்ஜி என்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உட்கட்டமைப்பு மற்றும் சோலார் பேனல் தயாரிப்பு திட்டங்கள் என 10 தொழில் திட்டங்களுக்கு அரசின் தொகுப்பு சலுகைகள், அரசாணைகள் மற்றும் ஆதரவு கடிதங்களையும் மேற்குறிப்பிட்ட தொழில் நிறுவனங்களின் உயர் அலுவலர்களிடம் வழங்கினார். மேற்படி 10 தொழில் திட்டங்களும் மொத்தம் ரூபாய் 24 ஆயிரத்து 230 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இதன் மூலமாக 15 ஆயிரத்து 920 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் 25 ஆயிரம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு. தேபேந்திரநாத் சாரங்கி, தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் தலைவர் திரு. நிரஞ்சன் மார்டி, தொழில் வழிகாட்டி அமைப்பின் செயல் துணைத் தலைவர் திரு.எம். வேல்முருகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.